தமிழ் நாடு சத்துணவு ஊழியர் சங்கம்
மாநில மையம்
8, பார்பர் அகான் தெரு, எல்லிஸ் பே...
சென்னை - 600 002

சுருக்கம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் - சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றும் பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சமுதாய ஊட்டச் சத்துப் பணியாளர்கள் - தொகுப்பூதிய பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் - திருத்திய ஊதிய விகிதம் வழங்க ஒப்பளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

<u>சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (சஊதி.1) துறை.</u>

<u>அரசு ஆணை (நிலை) எண்.70,</u> <u>நாள் 23.04.1998.</u>

<u>படிக்கப்பட்டது:-</u>

1. அரசு கடித எண்.11109/சஊதி.1/91-12, நாள் 3.12.1991;
2. அரசு ஆணை (நிலை) எண்.2, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம், நாள் 3.1.196;
3. அரசு கடித எண்.1544/சஊதி.1/96-1, நாள் 22.1.96;
4. அரசு ஆணை (நிலை) எண்.114, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 23.4.1997;
5. அரசு ஆணை (நிலை) எண்.162, நிதி (ஊதியக்குழு) நாள் 13.4.1998.

. . .

<u>ஆணை:-</u>

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்டுள்ள அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றும் பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் நிலை-1 மற்றும் நிலை-2 மற்றும் சமுதாய ஊட்டச் சத்துப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு 1.1.96 முதல் ரூ.200-5-250-10-400/- என்ற ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2./ சத்துணவுப் பணியாளர்கள் சங்கங்கள் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் உயர்த்தவும் இத் திட்டங்களில் பணியாற்றும் சமையலர்கள் மற்றும் உதவியாளர்களின் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்தவும் மற்றும் ஓய்வு பெறும் போதும் அவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.20,000/- வழங்கவும் கோரிக்கைகள் விடுத்து அரசிடம் வலியுறுத்தி உள்ளனர்.

3. அரசு சத்துணவுப் பணியாளர் சங்கங்களின் கோரிக்கைகளை கவனமாக ஆய்வுசெய்த பின், மேற்படி திட்டங்களில் பணியாற்றும் சத்துணவு

/த.பி.பா./

அமைப்பாளர்களுக்கு 1.1.1996 முதல் அவர்களது ஊதிய விகிதத்தை திருத்தி-யமைத்தும் சமையலர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு மதிப்பூதியம் நிர்ணயித்தும் இப் பணியாளர்களுக்கு ஓய்வு பெறும்போது வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்தவும் மற்றும் சிறப்பு சேம நலம் மற்றும் பணிக்கொடை திட்டத்தை அவர்களுக்கு செயல்படுத்தவும் அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றும் பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் நிலை-1 மற்றும் நிலை-2 மற்றும் சமுதாய ஊட்டச் சத்துப் பணியாளர் ஆகியவர்களது ஊதிய விகிதம் ரு.200-5-250-10-400/-லிருந்து 1.1.96 முதல் ரு.600-10-700-20-1100/- என திருத்தி வழங்கப்படும். இந்த ஊதிய விகிதத்தில் இவர்களது ஊதியம் 1.1.96 முதல் ரு.760/- என நிர்ணயிக்கப்படும்.
2. சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களுக்கு 1.1.96-ல் மதிப்பூதியம் ரு.450/-ஆக நிர்ணயிக்கப்படுகிறது.
3. சத்துணவு மையங்களில் பணியாற்றும் உதவியாளர்கள் பெறும் மதிப்பூதியம் 1.1.96-ல் ரு.400/- என்று நிர்ணயிக்கப்படுகிறது.

4. மற்ற அரசு பணியாளர்களுக்கு ஊதிய நிலுவையை அளிப்பது பற்றிய அரசாணை நிலை எண்.162, நிதி (ஊதியக்குழு)-வில் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

5. அரசு ஆணை (நிலை)எண். 641, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 29.12.1997-ன்படி மேற்படி திட்டங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிலுவைத் தொகை (Adhoc Arrear Payment ) ரு.500/-ஐ இவர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகித நிர்ணயப் பயன் நிலுவைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

6. அரசு மேலும் கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது:-

1. சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களுக்கும் உதவியாளர்களுக்கும் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்படுகிறது.
2. அரசு ஆணை (நிலை)எண்.136, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 29.2.1994 மற்றும் அரசு கடித எண்.64/டிஎஸ்(சி)/94, நாள் 20.3.94-ல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு சேம நலம் மற்றும் பணிக்கொடைத் திட்டம் (Special Provident Fund-cum-Gratuity Scheme )சத்துணவு பணியாளர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. இதன்படி மாதம் ரு.20/- வீதம் அவர்களது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு 148 மாதங்களுக்கு சேமிக்கப்படும். பின்னர் இதர அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதுபோல் அத்தொகைக்கான வட்டியுடன், அரசின்

பங்காக ரூ.5000/-மும் சேர்த்து ஓய்வு பெறும் போது அவர்களுக்கு வழங்கப்படும்.

7. இத் திட்டங்களுக்கான செலவினம் சம்பந்தப்பட்ட திட்டக் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். இது தொடர்பான மேல் நடவடிக்கை உடனே எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8 இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித் துறை தனது இசைவை அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.410.JS(LSR) /98 நாள் 23.4.1998-ல் தெரிவித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. காசிநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநர், சென்னை 600 005.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை 600 015.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 600 005.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம், சென்னை 600 020.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள், சென்னை (வடக்கு)சென்னை 600079.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை (தெற்கு)சென்னை 600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு)சென்னை 600 005.
ஆணையாளர், கருவூலகம் மற்றும் கணக்கு இயக்ககம், சென்னை 600 015.
அரசு துறை நிறுவன தணிக்கை தலைவர், சென்னை 600 018.
அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், சென்னை/மதுரை/திருச்சிராப்பள்ளி/திருநெல்வேலி/கோயம்புத்தூர்/சேலம்.

நகல் நிதித்துறை, சென்னை 600 009.
ச.ந.7 பிரிவு.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா ...
பிரிவு அலுவலர்.